பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 03 2026 7 15
வெள்ளிக்கிழமை இரவு
ஆகாஷவாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடுமுழுவதும் சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. புதிய வருமான வரிச் சட்டம் குறித்த தேசிய விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

3. வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஈரான் – அமெரிக்கா இடையிலான மோதலில் எவ்வித சார்பும் இன்றி நடுநிலையுடன் செயல்பட்டு வருவதாக இலங்கை அறிவித்துள்ளது.

5. Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் -

நாடுமுழுவதும் சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

சுகாதார சேவைகளை வழங்குவதில் மிகப்பெரிய அளவில் சீர்திருத்தங்களை இந்த திட்டம் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் உயரிய மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டை இந்த திட்டம் எடுத்துரைப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>><><><><<<

புதிய வருமான வரிச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

தேசிய அளவில் நடைபெறவுள்ள இந்த இயக்கத்தில் புதிய வருமான வரி சட்டத்தின் அம்சங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>>><><><><<<

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தமது துறையின் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் விளைபொருட்கள் கொள்முதல் செய்வதற்கான பணிகள் சுமூகமாக நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த சேதத்தை உடனுக்குடன் ஆய்வு செய்யுமாறும் திரு சிவராஜ் சிங் சௌகான் அறிவுறுத்தினார்.

>>><><><><<<

மின்துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் மாநில அரசுகளுக்கு தேவையான அனைத்து உதவிகளை மத்திய அரசு வழங்கும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு மனோகர் லால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மாநிலங்களின் மின்துறை அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

மின்உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அவர் பட்டியலிட்டார்.

மின்விநியோகம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு மாநில அரசுகள், மத்திய அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் என்றும் திரு மனோகர் லால் தெரிவித்தார்.

>>><><><><<<

உரங்கள் எவ்வித தட்டுப்பாடும் இன்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

போதிய அளவில் உரங்கள் கையிருப்பில் உள்ளதாகவும் உரத்துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

உரத்தேவையை பூர்த்தி செய்வதற்காக இறக்குமதி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>><><><><<<

சமையல் எரிவாயு உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத் துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா, நாடுமுழுவதும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அச்சத்தின் அடிப்படையில் சமையல் எரிவாயு பதிவு செய்வது குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருமதி சுஜாதா ஷர்மா எச்சரித்தார்.

>>><><><><<<

பள்ளிப் படிப்பை பாதியிலேயே கைவிட்டவர்களை கண்டறிந்து அவர்கள் படிப்பை தொடர்வதற்கான தேசிய இயக்கம் விரைவில் தொடங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வித்துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>>><><><><<<

தேசிய பல் மருத்துவ ஆணையத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

பல் மருத்துவ குழுமத்திற்கு மாற்றாக இந்த ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

பல் மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>><><><><<<

உலக வர்த்தக அமைப்பு மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

கேமரூனில் வரும் 26 ஆம் தேதி தொடங்கி 29 ஆம் தேதிவரை நடைபெறவுள்ள உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் இந்தியா வலியுறுத்தும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த கூட்டத்தில் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் பங்கேற்கவுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>><><><<<

தமிழகம், கேரளா, அஸ்ஸாம், மேற்கு வங்கம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர்கள் எவ்வித சிரமமும் இன்றி வாக்களிப்பதற்கு ஏதுவாக பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் இந்த வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள 12 மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், மத்திய – மாநில அரசுகளின் அடையாள அட்டைகள், பான் அட்டை, ஓய்வூதிய ஆவணம், ஆதார் அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி அடையாள அட்டை, தொழிலாளர் நலத்துறை வழங்கும் சுகாதார காப்பீட்டு அட்டை, ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட அட்டை போன்றவற்றை பயன்படுத்தி  வாக்களிக்கலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வைத்திருந்தும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் சம்பந்தப்பட்டவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுப்படுத்தியுள்ளது.

>>><><><<<

கேரளாவில் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், கேரளம் மக்களின் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில் காங்கிரஸ் கூட்டணி செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>><><><<<

மேற்கு வங்க சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை த்ரிணமுல் காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அக்கட்சியின் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி இதனை வெளியிட்டார்.

10 முக்கிய உறுதி மொழிகள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

மகளிர் நலனை கருத்தில் கொண்டு இந்த உறுதி மொழிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

>>><><><<<

ஈரான் – அமெரிக்கா இடையிலான மோதலில்  எவ்வித சார்பும் இன்றி நடுநிலையுடன் இலங்கை செயல்பட்டு வருவதாக அந்நாட்டு அதிபர் திரு Anura Kumara Dissanayake கூறியுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்த அவர், இலங்கை கடற்பகுதியை பயன்படுத்துவதற்கு அமெரிக்கா மற்றும் ஈரான் அனுமதி கோரியதாக குறிப்பிட்டார்.

இருப்பினும் இவ்விரு நாடுகளுக்கும் இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடல்சார் பாதுகாப்பு தொடர்பாக அமெரிக்காவுடன் கையெழுத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் இலங்கையின் நிலைப்பாட்டை எவ்விதத்திலும் பாதிக்காது என்றும் திரு Anura Kumara Dissanayake கூறினார்.

>>><><><<<

அமெரிக்காவுக்கு பாதுகாப்பு தளவாடங்களை ஏற்றுமதி செய்வதற்காக வழங்கப்பட்ட ஒப்புதலை நிறுத்தி வைப்பதாக ஸ்விட்சர்லாந்து அறிவித்துள்ளது.

அமெரிக்கா – ஈரான் இடையேயான மோதலில் நடுநிலையோடு செயல்படும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக ஸ்விட்சர்லாந்து அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>>><><><><<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் 21-14, 21-14 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Natsuki Nidaira ஐ வென்றார்.

----------------

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வீர் சோட்ரானி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-9, 11-8, 11-2 என்ற செட்கணக்கில் எகிப்தின் Mohammed Sharaf-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்வி கண்ணாவும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-6, 7-11, 11-5, 11-8 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Ainaa Amani-ஐ வென்றார்.

----------------

மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

20 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி, தாய்லாந்து சென்றடைந்தது.

அடுத்த மாதம் 2 ஆம் தேதி இந்தியா முதல் போட்டியில் ஜப்பானை எதிர்கொள்கிறது.

----------------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய மகளிர் அணி பங்கேற்கவுள்ளது.

தென்னாப்பிரிக்காவில் டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தொடங்கும் என்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் 9 ஆம் தேதி தொடங்கி 15 ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------------

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Manisha Patel அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 21-18 என்ற செட்கணக்கில் பெருவின் Rubi Milagros Fernandez -ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Nitesh Kumar - துளசிமதி முருகேசன் இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதி ஆட்டத்தில் இணை 21-12, 21-8 என்ற செட்கணக்கில் பிரான்சின் Laureen Marchand – Colin Kerouanton இணையை வென்றது.

இப்பிரிவில் பிரமோத் பகத் – மனிஷா ராம்தாஸ் இணையும், நீரஜ் – சிவம் யாதவ் இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.